# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

## அசல் வழக்கு எண். 13/2014

வாக்குமூலம். பி. வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | ஜாதி | |
| த/பெ. | நாகு தேவர் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 73 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 19.08.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**மறுகுறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. தாவா சொத்தை நானும் எனது மனைவியும் இருவேறு கிரைய பத்திரங்கள் மூலம் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பத்திரத்தின் மூலம் எவ்வளவு கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் 8-1/2 செண்ட் கிரையம் வாங்கியிருக்கிறேன். நான் கிரையம் வாங்கிய சொத்தின் பழைய புல எண். 206/106. மேற்படி புல எண். 206/106 ன் மொத்த விஸ்திரணம் 270 குழி கீழ்புறம் 8-1/2 செண்ட் கிரையம் வாங்கினேன், ஆக கீழ்புறம் கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை. ஆக கீழ்புறம் கோவிந்தசாமிபிள்ளை இடமாகும். புல எண். 206/106 க்கு கீழ்புறம் தான் கோவிந்தசாமிபிள்ளை இடம் என்றால் சரியல்ல. புல எண். 206/106 க்கு உட்பட்டு ஆக கீழ்புறத்தில் தான் அவரது இடம்.

7. மொத்தம் 206/106 விஸ்தீரணம் 36 செண்ட் ஆகும். புல எண். 206/106 மொத்த விஸ்தீரணம் 90 செண்ட் என்றாலும், நான் விவரம் தெரியாமல் 36 செண்ட் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி புல எண். 206*/106 செண்ட் மேல்புறம் யாருக்கு பாத்தியம் என்றால் சுப்ரமணி மற்றும் உண்ணாமலையம்மாளுக்கு பாத்தியம். சுப்ரமணியனும், உண்ணாமலையம்மாளும் சுப்பையா மற்றும் சிவகாமியிடம் கிரையம் வாங்கியிருக்கிறார்கள். மேற்படி சுப்ரமணியனும், உண்ணாமலையம்மாளும் 36 செண்ட் கிரையம் வாங்கியிருக்கிறார்கள். என்னுடைய கிரைய பத்திரத்தில் குப்பம்மாள் அவர்களிடம் கிரையம் வாங்கி 1952 வருட ஆவண எண் 803 ஆக பதிவாகி உள்ளது என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். குப்பம்மாள் மேற்படி சொத்து எப்படி சொந்தம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை குப்பம்மாள் மற்றும் காத்தாயி

ஆகியோர் சௌந்திரத்தம்மாள் என்பவரிடம் இருந்து 18.06.1942 ஆவண எண். 878 ன்படி கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி குப்பம்மாளும், காத்தாயிம் 30 செண்ட் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குப்பமாளும் காத்தாயிம் சகோதரிகள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் பார்க்கவில்லை. அதன் அடிப்படையில் குப்பமாளுக்கு 15 செண்ட், காத்தாயிக்கு 15 செண்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. என்னுடைய கிரையத்திற்கு குப்பம்மாள் பெயரில் ஏற்பட்ட ஆவணம் தான் மூல ஆவணம் என்றாலும் நான் அந்த ஆவணத்தை பார்த்து முறையாக சொத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி குப்பம்மாள் கிரையம் வாங்கிய பத்திரத்தில் கண்ட நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி குப்பம்மாள் பெயரில் ஏற்பட்ட பத்திரத்தில் வடக்கே நடைபாதை, கிழக்கே செல்லத்தம்மாள், தென்புறம் கூத்தபெருமாள், மேல்புறம் சந்திரசேகரன் என்று கண்டு கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றாலும், மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரிந்தும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து அமைந்த புல எண்ணின் 90 செண்ட் குப்பமாளின் கணவர் சந்திரசேகர பிள்ளைக்கு பாத்தியம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்திரசேகரபிள்ளை குப்பம்மாளின் கணவர் என்றால் குப்பமாளின் கணவர் பெயர் சந்திரசேகரபிள்ளை என்பது எனக்கு தெரியும், ஆனால் அந்த சந்திரசேகரபிள்ளை தான் ஆவணத்தில் கண்ட சந்திரசேகரபிள்ளை என்று எனக்கு தெரியாது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ 1 மற்றும் 2 ஆவணங்களை பார்த்தினேனா என்றால் அவை உண்மையான ஆவணங்கள் இல்லை. மேற்படி ஆவணங்கள் உண்மையானவை இல்லை என்று நான் சொல்வது தவறு என்றாலும் நான் கிரையம் வாங்கியதே மேற்படி ஆவணங்களின அடிப்படையில் தான் என்றால் சரியல்ல. குப்பம்மாள் கிரையம் வாங்கியது 15 செண்ட் தான் என்றபோது எனது கிரைய முன்னவர்களுக்கு 31 செண்ட் கிரையம் தர அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

10. குப்பம்மாள் கிரையம் வாங்கிய ஆவணத்திலேயே கீழ்புறம் செல்லத்தம்மாள் என்ற நான்கெல்லை காணப்பட்டுள்ளது என்றாலும், அந்த கிரைய ஆவணத்தில் 270 குழியில் கீழ்புறம் 90 குழி என்று கண்டு செல்லத்தம்மாள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் புல எண். 206/106 ல் கீழ்புறம் 45 செண்ட் இடம் காத்தாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காத்தாயி அம்மாளுக்கு 1948 பத்திரப்படியும் 1932 கிரைய ஆவணப்படியும் பாத்திய்பபட்டது என்றால் சரியல்ல. மேற்படி 90 குழி இடத்திற்கு கீழ்புற எல்லையாக 1948 பத்திரத்தில் கோவிந்தன் இடத்திற்கு மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண். 206/106

காத்தாயிக்கு 45 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 45 செண்ட் உட்பிரிவு செய்யப்பட்டதன்படி புல எண். 206/106 மற்றும் எஞ்சிய பகுதிகள் காத்தாயிக்கு சொந்தம் என்றால் சரியல்ல.

11. தற்போது நகர நிலஅளவையின்படி நகர புல எண் 47 – 3750 சதுர அடி மேலும் கூடுதலாக 10 செண்ட் வைரேசி புஞ்சையாக அளவை செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதனால் எனது கிரைய முன்னவரான உண்ணாமலையம்மாளுக்கு கிரையம் கொடுத்த சிவகாமிக்கு கிரையம் கொடுத்த குப்பமாளுக்கு அந்த புல எண்ணில் 15 செண்ட் தான் பாத்தியம் என்றாலும், நான் பாத்தியம் இல்லாமல் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒ/ம். V. சிவகாமசுந்தரி,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**